# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.10/2025 |
| Deposition of witness | : | PW- 5 |
| Name | : | அனிஷ் சுந்தர்நாராயணன் |
| Father’s /Husband Name | : | சூரியநாராயணன் |
| Village | : | திருவாரூர் |
| Taluk | : | திருவாரூர். |
| Age | : | 34 |
| Occupation | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 22nd day May 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.08.2024-ம் தேதி மதியம் 01.00 மணியளவில் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூர் மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த மருத்துவர் பிரகாஷ் என்பவரையும் அவரது கையொப்பத்தையும் எனக்கு நன்கு தெரியும். கடந்த 12.08.2024 ம் தேதி மதியம் 1,00 மணியளவில் அவர் அவசர சிகிச்சை பிரிவில் பணி மருத்துவராக பிணியிலிருந்தபோது 45 வயது மதிக்கத்தக்க காத்தவராயன் என்பவரை கருணாமூர்த்தி என்பவர் சிகிச்சைக்காக சேர்த்துள்ளார். அவரை மருத்துவர் விசாரித்தபோது அன்று மதியம் 12.40 மணியளவில் முடிகொண்டான் அருகே இருசக்கர வாகனத்தில் வந்த போது லாரி மோதி காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளார். அவரை பரிசோதித்தபோது அவரது வலது கை மற்றும் உதட்டில் இரத்தகாயம் இருந்துள்ளது. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டுள்ளார். மேற்படி காத்தவராயன் என்பவருக்கான விபத்து பதிவேடு **அ.சா.ஆ. 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே நாள் மதியம் 01.00 மணிக்கு 42 வயது மதிக்கத்தக்க துர்கா என்பவரை கருணாமூர்த்தி என்பவர் சிகிச்சைக்காக அனுமதித்தார். அவரை மருத்துவர் விசாரித்தபோது அன்று மதியம் 12.40 மணியளவில்

முடிகொண்டான் அருகே இருசக்கர வாகனத்தில் வந்த போது லாரி மோதி காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளார். அவரை பரிசோதித்த போது அவருக்கு இடது பக்க தோள்பட்டையில் வலி உள்ளதாக கூறியுள்ளார். அதை விபத்துபதிவேட்டில் பதிவு செய்து உள்நோயாளியாக அனுமதித்துள்ளார். சிகிச்சையிலிருந்த அவரை அவருக்கு தோள்பட்டையில் ஏற்பட்ட காயத்திற்கு நுண்கதிர் படம் எடுக்க வேண்டி பரிந்துரைத்தேன். அவர் எடுக்காமல் தன்னிச்சையாக மருத்துவமனையை விட்டு வெளியேறினார். மேற்படி நபருக்கான விபத்து பதிவேடு **அ.சா.ஆ. 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நபருக்கான காயச்சான்று **அ.சா.ஆ. 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:-

சம்பவ நேரம் என்னவென்றால் 12.40 ஆகும். மேற்படி நபர்களுக்கான காயங்கள் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் வாகனத்தை இயக்கி ஒரு மின் கம்பத்தில் மோதினால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. மேற்படி துர்கா அவ்வாறு மோதும்போது கீழே விழுந்தால் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2025.05.22 06:31:18 +0530